# என்னைப் பார்க்கிறேன்

## உ.பே.ச. கவிதைகள்

84

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்





# எண்ணிப் பார்க்கிறேன்!

# எண்ணிப் பார்க்கிறேன்!



ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

# நூல் விவரம்


- நூற்பெயர் :
**எண்ணிப் பார்க்கிறேன்!**

- ஆசிரியர் :
**கலைமாமணி**
**டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்**

- உரிமை :
**எஸ். அம்சவள்ளி**
(W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)

- அச்சிட்டோர் :
**பிராசஸ் இந்தியா**
294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 14.

- பதிப்பு : 2011

- பக்கம் : 76

- விலை : **45/-**

- நூலாக்கம் :
**டெலிபாய்ன்ட்**
16, சின்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 5.
Ph : 2848 3750

- For Sales &
Enquiries Contact : **S. AMSAVALLI**
14, Amirtham Avenue, Bharani Street,
Velacherry, Chennai - 600 042.
Mobile : 9380297675, 9566042884
email : ussankarram@gmail.com
ussankarram@yahoo.com



- காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.


---


**வெளியீடு : நெய்தல் பதிப்பகம்**
எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5
Phone : 2848 3860
Mobile : 98415 37495
Email : neithalp@yahoo.in



# சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

**– வாலி –**

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது - நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்ச வல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்
இளம் புன்னகையை வைத்து
தன்வயம் எவரையும் ஈர்த்த
தண்முகம்;
நுவலும் பேச்சிலும்.
நோற்கும் பாட்டிலும்.
நுழைபுலம் துலங்க நிற்கும்
நுண்முகம்!

*   *   *

உருவம் குறில்;
உள்ளம் நெடில்; அவன்
உண்ணா
உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;
ஆறுமுகனையும்.
ஆனைமுகனையும்.
அதிகம் பாடியதாய்
ஆரைச் சொல்வது அவனை விடில்?

*   *   *

இவனால் தான்
இவன் பிறந்த
உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்
எழுந்தூர்ப்பேட்டை ஆனது;
இவன்
இயற்றிய
தனிப்பாடல்களாலும்;
திரைப்பாடல்களாலும்;
கானத்தமிழ்
கடல்கள் தாண்டி -
உலகத்தார்
உட்செவிக்குள் போனது!

*   *   *

வேங்கடவன்;
வேலவன்;
வேழமுகன்;
வாயு மகன்;
இன்னும்
இறையருள் பெற்ற.....

வேதாத்தரி;
விசிறி சாமியார்;

என
எந்த -
இறையும்;
இறையடியாரும் மிச்சமின்றி.....
இவனது -
பாடுபொருள் ஆயினர்; இவன்
பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

* * *

கண்ணதாசன் போல் - இந்தக்
கவிப்பெருந் தகையும்....

பெரியாரிடமிருந்து
பெருமாளிடம் வந்தவன்;
தான்பெற்ற இன்பம் - இந்தத்
தரணிபெற வேண்டி -

ஆன்ம
அனுபூதியை -
வையம் உய்யுமாறு
வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

* * *

சுருங்கச்
சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க – இடை
அறாது ஞானமழை பெய்தது!

*   *   *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

*   *   *

கோடம்பாக்கத்திலும் – அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் –
'சிவாஜி' யும் –

அகத்தியனாயும்; சோழ –
அரசை ஆண்ட ராஜராஜனாயும் –
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....

போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

*   *   *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

* * *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

* * *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....

அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ணத்தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

* * *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;
நல்ல பெயர்த்திகள்;
இவர்களின்
இதயங்களில் மட்டுமல்ல -
எம்மனோர்
எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -
வாழ்வாங்கு
வாழ -
கருத்துகளைக்
கற்கும்!

* * *

வாலி

# கலைமாமணி
# டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
## ஒரு சிறு குறிப்பு



கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமூதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று. சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப்

பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக்களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாடுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

## நெய்தல் பேசுகிறது....

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்தொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ.வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு **உ.பே.ச.** - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
**உ**லகம் **பே**சும் **ச**ண்முகம் - உ.பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்குமதகடு.
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

## பொருளடக்கம்

இசைப்பாடல் .................................................. 17

கவிதை .................................................. 26

தத்துவம் .................................................. 38

# இசைப்பாடல்



# 1. தீராத தாகம்

என்றும் தீராத தாகம்
இசையே எனக்கோர் யாகம்
என் வாழ்வெனும்
பொன் வீணையில்
ஏழு ஸ்வரங்களின் நாதம்
சங்கீதம்
சாமவேதம் (என்றும்)

குயிலின் குரல்போல குழல் ஓசையே
அருவி குதித்தாடும் முழவோசையே
எங்கோ ஒருபறவை எழுப்பும் ஒலி அலையில்
இனிய நாதசுரம் இழையும் சுருதிலயம் (என்றும்)

மேகம் அதிர்ந்திடும் மேளம் அடித்திடும்
ஓம்என மாமழை கானம் பாடிடும்
கடலும் கைகள் கொட்டி முழக்கிடும்
காற்றும் ஆயிரம் கவிகள் வடித்திடும்

ஆரோ ஆரிரரோ.... தாயின் தாலாட்டு
ஏலோ ஏலிலலோ.. பாட்டாளி மூச்சு
எங்கும் எதிலும் இன்பராகம்
சங்கும் முழங்கும் சிந்து பாடும்

மொழிகடந்து இனம் கடந்து உலகளாவுதே
மனிதனாகப் புனிதனாக மலர்கள் தூவுதே
இரத்தத்தில் கலந்து விட்டதே - இசை
என்னோடு இணைந்து விட்டதே

**ச ரி க ம ப த நி** (என்றும்)

# 2. ஒருமெல்லிசை வேண்டும்!

என் நெஞ்சினைத் தூண்டும்
ஒரு மெல்லிசை வேண்டும்
அதன் நினைவினில் மீண்டும்
மீண்டும் நனைந்திட வேண்டும் (என் நெஞ்சினை)

கானகத்தில் மான்கூட்டம் துள்ளிவரும் அதுபோல்
கன்னிஅவள் கருவிழிகள் கொள்ளை கொள்ளும் அதுபோல்
ஓடையிலே அன்னங்கள் கூடிவரும் அதுபோல்
தோகைமயில் நடைபயின்று ஆடிவரும் அதுபோல்
(என் நெஞ்சினை)

தென்றல் வந்து மேனிஎல்லாம் முத்தம் இடும் அதுபோல்
அந்தியிலே சண்பகப்பூ மொட்டவிழும் அதுபோல்
கொஞ்சிக்கொஞ்சிக் குலவுகின்ற குழந்தைமனம் அதுபோல்
சந்தனத்தில் தனிவாசம் தழுவுகின்ற சுகம்போல்
(என் நெஞ்சினை)

தித்திக்கும் பொங்கலிலே நெய்வழியும் அதுபோல்
தேன்சிந்தும் வைகறையில் பனிபொழியும் அதுபோல்
முத்துக்கள் உருண்டோடி விளையாடும் அதுபோல்
மோகனமாய்க் குயிலிரண்டு இசைபாடும் அதுபோல்
(என் நெஞ்சினை)

# 3. உயிர் வளர்க்கும் கீதம்

கீதம் - சங்கீதம்
உடல் சிலிர்க்கும் உயிர் வளர்க்கும் - அமுத
(கீதம்)

நாதம் அருட்போதம் இசைஞானம் இன்பமாகும்
அகம் காதலாலே மகிழும் நெகிழும்
(கீதம்)

மோதும் துன்ப அலைகள் பறந்தோடும் இசைப்பாட்டால்
ஓதும்வழி உணர்ந்தே - அதை ஒன்றி செவிகேட்டால்
யாதுமில்லை அசையாதது இசையாம் அதன் வசமாய்
கீதச்சுவைக்கு இணையாகவே ஏதுமில்லை நிசமாய்
(கீதம்)

# 4. தனிமொழி

ச ரி க ம ப த நி...
இசையின் தனிமொழி
உலகம் அனைத்தையும்
ஒன்று சேர்க்கும் வழி (சரிகமபதநி)

கடலின் அலையிலே தபலா அதிர்ந்திடும்
அருவியின் துள்ளலில் மத்தளம் முழங்கிடும்
பெருமழைத் தூறலில் வயலின் இழைந்திடும்
மழலையின் குரலினில் வீணை விளங்கும்

மங்கை நடந்து வரும்
அங்க அசைவுகளில்
சங்கீத சுரங்கள் பேசிடும் - அவள்
மகிழ்ந்து உறவாடி
உதிர்க்கும் சிரிப்பினில்
பலப்பல ராகங்கள் உதித்திடும்
எங்கும் கேட்கின்ற
ஓசை ஒலிகளில்
எத்தனையோ தாளம் கிட்டிடும்
இங்கும் அங்கும்
பறவைகள் கூவல்கள்
ஏழிசையையும் கொட்டிடும்

இந்த உலகம் இசையரங்கம்
சுற்றிலும் ஜல தரங்கம்

எந்தன் ரத்தம் நாடி நரம்பிலும்

இசையின் நடனம் நடந்திடும்

நானோர் புல்லாங்குழல்

என்னுள் நாதச் சுழல்

அ அ அ அ அ (சரிகமபதநி)





# 5. இசைப்பாடகி

ஸ்வரம் லயம் பாவம்
இவள்குரல் அதுஎன்ன பனிமழையா
இதயம் குளிருது
புதுசுகம் விளையுது (ஸ்வரம்)

ஐந்தருவிச் சாரல் அலை அலையாய்ப் பரவுது
ஆலாபனைகள் வந்து தானாக உருளுது
செந்தமிழ்த் தேன் இவள் சங்கீத மேதானோ?
சிந்தை அணு ஒவ்வொன்றும்
சிலிர்க்குது
தித்திக்குது (ஸ்வரம்)

வந்தாள் அமர்ந்தாள் வாய்திறந்தாள்
கனி வழங்குகின்றாள்
வெண் சங்கம் எடுத்தே ஊதுகின்றாள்
முரசு முழங்குகின்றாள்
அங்க அசைவுகள் ஒரு சிங்காரத் தேரோ
ஆடி வருகுது - இசை
பாடி வருகுது - கருங்
கல்லும் உருகுது
அரும்பு வெடிக்குது கரும்பு வடிக்குது
மணம், சுவை, ஒலி, ஒளி, சுகம்....

ஐந்து புலன்களும் விருந்து பெறுகுது
அருந்தி மகிழுது
இனியது அது எனை என்னவோ செய்யுது.....! (ஸ்வரம்)



# 6. நடனமே என் நினைவு

நடனமே என் நினைவு
சுகந்தரும் ஏகாந்தக் கனவு
இறைவனின் ஆதரவு அன்புறவு (நடனமே)

மலர் மாரியா வசந்த எழிற் கோலமா
குயில் பாடுமா இசையின் அபிஷேகமா
வீசிடுமா சந்தனம் பூசிடுமா
இளந்தென்றல் சிறுபிள்ளை விளையாடுமா

விண்ணில் சிரித்திருக்கும் நட்சத்திரம்
விழியாலே பேசிடும் பெண் சித்திரம்

தாகம் தீர்க்கும் என் கவிதை
சங்கீ தம்தான் அதற்கு விதை
கலைமகள் தானெந்தன் உயிரே நான் வணங்கும் (நடனம்)

நாட்டியமே எனது நந்தவனம்
நடைஅழகில் சொக்கிப் பூவிரியும்
காற்றினில் வரும்கீதம் ஆட்டிவைக்கும்
நாதச் சிலம்போசை எதிரொலிக்கும்

ஜதியில் கூத்தாடும் சுரஒழுங்கு - (ஒரு)
சுருதியில் நின்றாடும் லய அழகு
இனி இன்பமே பேரின்பமே
கலை மோஹமே கதிமோட்சமே (நடனம்)

# கவிதை



# 7. கவிதைக்கலை

எனக்கே தெரியும் இதயம் அறியும்
கவிதைக் கலை ஈது - இதில்
எளிதில் இடமோ எவரும் பெறலாம்
என்பது இயலாது!

கணக்கும் இல்லை கவித்துவம் இல்லை
காரிகை கற்றனையோ - என
கட்டிய வீட்டுக்குக் குற்றம் சொல்லும்
கசப்புகள் எத்தனையோ!

மனத்துள் விளையும் உணர்வுகள் எல்லாம்
கணக்கினில் அடங்கிடுமோ? - அவை
வனப்புகள் பெற்று வடிவமும் உற்றால்
இலக்கணம் முடங்கிடுமோ?

என்னை மறந்தே எழுதுவதெல்லாம்
அன்னையின் நிலையிலன்றோ! - இதில்
எத்தனை குறைகள் இருந்திட்ட போதிலும்
என்பிள்ளை ஈதன்றோ!



# 8. கவிதைகள்

நெஞ்சினிலே தோய்ந்தவெலாம்
நீருற்றுப் போல் எழுந்தே
கொஞ்சுதமிழ்ச் சுவைசேர்த்துக்
குவிந்திடுமே கவிதைகளாய்! (நெஞ்சினிலே)

பாய்ந்துவரும் அருவியைப்போல்
பழம் நினைவு ஓரொருகால்
ஓய்ந்திருந்த நிலைமாறி
உருண்டிடுமே கவிதைகளாய்!

கானாற்று வெள்ளம்போல்
காட்சிசில மனம்மயக்கி
தானாகக் கிளர்ந்தெழுந்து
தாவிடுமே கவிதைகளாய்!

ஆழ்ந்திருக்கும் கடற்பரப்பில்
அலைகள்எனச் சிலநேரம்
சூழ்ந்திருக்கும் நினைவலைகள்
துள்ளிடுமே கவிதைகளாய்!

சுற்றுமுற்றும் எழிற்காட்சி
தொடர்ந்திருக்கக் காணும்வரை
கற்பனைக்குப் பஞ்சம் உண்டோ
கனிந்திடுமே கவிதைகளாய்!

உள்ளத்திலே உணர்வு
உள்ளவரை உறவாடி
பிள்ளைஎன மெல்லவந்து
பேசிடுமே கவிதைகளாய்! (நெஞ்சினிலே)



# 9. சிட்டுக்குருவியைப் போலே!

சிறகை விரித்துப் பறந்து திரிந்திடும்
சிட்டுக் குருவியைப் போலே - வெளி
உறவை அறுத்தே உண்மை உரைத்திடும்
திண்மைக் கவிஞன் ஆனேன்!- மிகப்
பெருகிடும் இன்பக் களியில் மிதந்தே
வழிந்திடும் கவிதைகள் தந்தே - இனி
வருவது வரட்டும் என்று நிமிர்ந்தே
உலகை நகைக்கலானேன்!

மனதினில் பட்டதை வெளியினில் சொல்லத்
துணிந்தேன் துணிந்துவிட்டேனே - ஆம்
தினம் தினம் செத்துப் பிழைப்பதை விடவே
தெளிந்த சாவேமேலே - என்
கனவுகள் நினைவுகள் கற்பனை விழைவுகள்
அனைத்தையும் எடுத்துரைப்பேனே - அட
எனைஒரு பைத்தியம் என்பவர் பைத்தியம்
என்பதையும் சொல்வேனே!



# 10. நானும் ஒரு தேனி

நானும் ஒரு தே...னி..
பாட்டுப்பாட வா... நீ... (நானும் ஒரு)

பூவுக்குப்பூ தேடி சென்று
புத்தமுதுண்டு சொற்களைக் கட்டும் (நானும் ஒரு)

சொந்தத் தோட்டம் இல்லை
சுதந்திரமே எல்லை (சொந்த)

எந்தத் தோட்டம் என்றால் என்ன
எங்கிருந்தாலும் மலர்களைச் சுவைக்கும் (நானும் ஒரு)

பாடுபட்டுச் சேர்த்த
பலன் எனக்கு இல்லை
கூட்டினையே கொளுத்தும்
கொள்ளையரால் தொல்லை
வீடழிந்த போதும்
தேனிருக்கும் கண்ணே - என்
பாடல்கள் வாழும்
மரணம் எனக் கில்லை....
மரணம் இல்லை பெண்ணே (நானும் ஒரு)



# 11. ஏன் பாடுகிறேன்?

நான் பாடுகிறேன் பாடுகிறேன் - சில
பல்லவி நெல்லாய் அமைகிறது - சில
பதராய்க் கல்லாய்ப் போகிறது (நான்)

ஏன் பாடுகிறேன் நான் பாடுகிறேன் - இதை
எண்ணிப் பார்த்தால் சிரிப்பு வரும்
கண்ணீ ரும்சில நேரம் வரும் (நான்)

ஆம் பாடுகிறேன் நான் பாடுகிறேன் - என்
ஆன்ம தாகம் பாடுகிறேன் - குளிர்
நீரால் நெஞ்சம் நனைகிறது - கொடுங்
கானலும் என்னைச் சுடுகிறது! (நான்)

எனின் பாடுகிறேன் ஏன் பாடுகிறேன் - ஓர்
எல்லையில் நிற்க முடிவதில்லை - அதனால்
எல்லையில் லாததைப் பாடுகிறேன்
இயற்கையை இறைவனை பாடுகிறேன் (நான்)

புனிதர்களை நான் பாடுகிறேன் - அவர்
பொன்னடியை நான் தேடுகிறேன் - சில
மனிதரை யும்நான் பாடுகிறேன் - என்
மனத்தால் பாமலர் சூடுகிறேன் (நான்)

இடுக்கண் முட்களை எடுத்துதவும் -என்
இனிய தோழரைப் பாடுகிறேன்
அடுத்துக் கெடுப்பார் அவர்களையும் - நான்
அண்டிப் பிழைப்பதால் பாடுகிறேன் (நான்)

வாழ்வு செழிக்கப் பாடுகிறேன் - என்
வயிறு வளர்க்கவும் பாடுகிறேன்

பாழும் கூண்டில் அடைந்திருந்தும் - நான்
பாடும் பறவை பாடுகிறேன்! (நான்)

பூட்டிய கூட்டை உடைத்தெறிய - என்
வார்த்தைகள் உதவும் பாடுகிறேன்
மாட்டிய வஞ்சக மாந்தர்களின் - கல்
மனமும் உருகிடப் பாடுகிறேன்... பாடுகிறேன்....!
(நான்)

இடுப்பு முறிந்த போதென்னை
எடுத்த கைகளைப் பாடுகிறேன்!
தடுப்புச் சுவர்களைத் தாண்டியும் நான்
சாக்கிய நாயனாய்ப் பாடுகிறேன்! (நான்)

என்னை அறிந்தார் கவிஅறிந்தார் - அவர்
இதயம் இனிக்கப் பாடுகிறேன்
என்னை அறியார் பொருள்தருவார் - அது
என்க்குத் தேவை பாடுகிறேன்!..... பாடுகிறேன்! (நான்)



# 12. சிறுவிதை - பெருமரம்

ஒருநாள் விதைத்தேன் சிறியவிதை - அது
பெருமர மாகிய பூங்கவிதை
வருநாள் எல்லாம் கனிவழங்கும் - என்
வாழ்நாள் தாண்டியும் புகழ் விளங்கும் (ஒருநாள்)

இறைவன் கொடுத்த அறிவுக்கலை - அது
விலைமதிப் பில்லாத அன்புக்கொடை
கவிஞன் என்பவன் சிறுகுழந்தை - இந்த
உலகம் அவனுக்குத் தாய்தந்தை (ஒருநாள்)

வண்ணத்துப் பூச்சிபோல் வளர்ந்து விட்டேன் - தேன்
மலர்களின் மேலே பறந்திருப்பேன்
எண்ணத்தைச் சொல்ல தடை எதற்கு - நான்
இதயத்தைக் காட்டும் ஒளி விளக்கு

சமூகம் என்னும் சந்தையிலே - என்
தனிமுகம் என்றும் விந்தை யன்றோ
அமைதியும் புயலும் வரும்போகும் - என்
ஆன்ம தாகம் நிலையாகும் (ஒருநாள்)



# 13. காலத்தைத் தாண்டும் கவிதை

எழுதுவதெல்லாம் கவிதைகள் என்றால்
எல்லோரும் கவிஞர்களே - நாம்
எண்ணுவதெல்லாம் திருக்குறள் என்றால்
யாவரும் வள்ளுவரே (எழுதுவதெல்லாம்)

பழுது வராமல் பாடு வதற்கு
பரமனின் அருள் வேண்டும் - அவன்
பாத மலர்களை பாடிடும் பாட்டே
காலத்தை எதிர்தாண்டும் (எழுதுவதெல்லாம்)

வந்தது எதற்கு என்பதை எண்ணும்
மனமே வளர்ந்த மனம் - இங்கு
தங்கிடும் நாட்கள் எத்தனை என்றே
யாரால் சொல இயலும்?

ஒருமுக மாக இறைவனை எண்ணும்
உளமே கவி உள்ளம் - தான்
உணர்ந்ததைச் சொல்லும் துணிவொன்றால் தான்
இலக்கியம் உயிர் வாழும் (எழுதுவதெல்லாம்)



# 14. எனக்கு யார்?

என்னைப் பற்றி எப்போது பாடுவேன்
தனைன மறந்து எப்போது ஆடுவேன்
இதுவரை நான் பிறர்மனதில்
இடம்பெறவே பாடி வந்தேன்
இன்று வரை என் மனதை
திறந்திடகே என் மறந்தேன்?

காலம் கடந்தது நேரம் பறந்தது
யார் என்னைப் பாடுவது - இனி
யார் என்னைப் பாடுவது? (என்னைப் பற்றி)

சூழ்நிலையின் கைதிஎனச் சுதந்திரம் இழந்துவிட்டேன்
யார் யாரோ வந்தார்கள் அனைவர்க்கும் வாழ்த்துரைத்தேன்
மணமடல்கள் இரங்கற்பா இரண்டையும் எழுதித்தந்தேன்
மற்றவர்கள் போற்றிடவே மகிழ்ச்சியில் நான் மிதந்தேன்

ஆட்டம் கலைந்தது வாட்டம் விரைந்தது
யார் என்னைப் பாடுவது - இனி
யார் என்னைப் பாடுவது? (என்னைப் பற்றி)

காதலையும் மோதலையும் கவிதையில் நான் உரைத்தேன்
பாதையிலே ஓடுகின்ற நாயையும் பாடிவைத்தேன்
வான்எழிலை மண்அழகை இயற்கையை வடித்தெடுத்தேன்
வாழ்வளித்த பரம்பொருளை எழுத்தினில் செதுக்கிவைத்தேன்

தூக்கம் பிறந்தது ஏக்கம வளர்ந்தது
யார் என்னைப் பாடுவது - இனி
யார் என்னைப் பாடுவது? (என்னைப் பற்றி)



# 15. வானம் பாடிகள்!

நாங்கள் பாடிகள்! - ஒரு
வீடில்லா நாடோடிகள்!
இந்த உலகத்தை மறந்து
அந்த உலகத்தை நினைந்து
வானில் பறக்கிறோம் - இன்பக்
காற்றில் மிதக்கிறோம்!
நாங்கள் வானம் பாடிகள்!

இறைகளைத் தேடி இறங்குவதில்லை
மரக்கிளைக் கூட்டில் உறங்குவதில்லை
ஒருதுளி தூய மழைத் துளிக்காக
உயர உயரப் பறக்கிறோம் - ஆம்
உம்மையும் கூட அழைக்கிறோம்!
நாங்கள் வானம் பாடிகள்!

குறுக்கும் நெடுக்கும் திரிவது எங்கள்
குலத்துக்குப் பழக்கம் இல்லை
கோணல் மாணல் குட்டிச் சுவர்கள்
எதிர்நின்று தடுப்பதில்லை
பரந்த வெளியில் சுதந்திரமாக
பறந்துகொண்டே இருப்போம்
நிரந்தரமாக இயற்கையை நாடி
தொடர்ந்து கொண்டே இருப்போம்!
நாங்கள் வானம்பாடிகள்!

அற்ப மனிதர்கள் இறக்கையைப் பிய்த்து
அடுப்பினில் எரிப்பதில்லை

சொற்ப சுகங்களில் சிக்கித் தவிக்கும்
தொந்தங்கள் எங்கட்கில்லை
சற்றும் கலப்பே இல்லா இறைவன்
சந்நிதி தேடுகின்றோம்
முற்றக் கலந்து மோனத்தில் திளைக்க
ஞானத்தை நாடுகின்றோம் - இன்ப
நாதத்தில் கூடுகின்றோம்
நாங்கள் வானம் பாடிகள்!



# தத்துவம்



# 16. கேள்விக் குறி

காலத்தின் மணிஓசை நாளும் - சுடர்
வானத்தைப் பாரென்றே ஓதும்
ஞாலத்தில் வாழ்க்கை அலை மோதும் - உயர்
ஞானத்தின் தேக்கநிலை கூறும்.... கூறும்!
(காலத்தின்)

தேனொத்த தாலாட்டு கேட்டோம் - பின்னர்
தீராத விளையாட்டுப் போட்டோம்
சாதித்த செயலென்ன சொல்ல - சாவின்
சந்திப்பை யார்இங்கு வெல்ல?.... வெல்ல?
(காலத்தின்)

ஏன்தானோ வீணாக வந்தோம் - நாம்
எதற்காக இம்மண்ணில் பிறந்தோம்
மோனத்தில் முடிகின்ற மூச்சு - ஒரு
முத்திரையைப் பதிக்காமல் போச்சு!.... போச்சு!
(காலத்தின்)



# 17. வானவில்!

வண்ணம் எல்லாம் நானே
வானவில் ஆனேன்
எண்ணம் ஏதும் இல்லை
இல்லை ஒரு தொல்லை!

ஆற்று நீரைப் போலே
அறுத்துக் கொண்டு செல்வேன்
காற்றைப் போல எங்கும்
கலந் திருக்கச் சொல்வேன்

மலர்களிலே மணப்பேன்
மலைஉச்சி நடப்பேன்
கடல்ஆழம் காண்பேன்
கட்டுப்பாடு வேண்டேன்

விண்மீனைத் தொடுவேன்
மின்னலாக உதிர்வேன்
பெண்ணைப்போல் குழைவேன்
பிள்ளைபோலத் தவழ்வேன்

ஏழு ஸ்வரங்கள் நானே
பாடலாகிப் போனேன்
நாளும் நாளும் புதுமை
எனக்கு ஏது முதுமை?

வீடு இந்த பூமி
வெட்ட வெளி சாமி
காடு போன்ற வாழ்வு
வாழ்ந்த பின்பு ஓய்வு!



# 18. எழு, விழி!

இருளெனும் பொருளே இல்லாமல் போகும்
ஒளிவரும் போதினிலே
எங்கம் எதிலும் சந்தோ ஷம்தான்
பாடுக பூங்குயிலே (இருளெனும்)

ஞாயிறின் கதிர்கள் நம்பிக்கை மலர்கள்
தூக்கம் பறக்கிறது
நாளொன்று மீண்டும் வந்தது எழுக
வாழ்வு பிறக்கிறது
போனதைப் பற்றி புலம்பிட வேண்டாம்
புதியதைச் சுவைத்திடுக
நாளைய கவலையும் வேண்டாம் நமக்கு
இன்று களித்திடுக (இருளெனும்)

ஒடுங்கிய பறவைகள் சிறகை விரித்து
வானில் பறப்பதைப் பார்
உயிரினம் யாவும் இயங்கும் அழகை
கணந்தொறும் உற்றப் பார்
மனிதா நீமட்டும் மனத்தின் அடிமை
சுருண்டு கிடக்கின்றாய்
மகிழ்ச்சிதான் ஆயுதம் எடுத்துக்கொள் அதனைத்
தொடர்ந்தே நடந்திடுவாய் (இருளெனும்)



# 19. இரட்டை வேடம்

அழகு ரோஜா மலரின் அடியில்
    முள் இருப்பதன் மர்மம் என்ன?

நெளியும் பாம்பின் தலையில் நஞ்சு
    பொதிந்திருப்பதன் பொருள்தான் என்ன? (அழகுரோஜா)

விளையும் பயிர்கள் நடுவே அதுபோல்
    களைகள் வளரும் நிலைமை என்ன?
வெளிச்சம் என்றால் அதற்குப் பின்னே
    இருளின் வட்டம் தெரிவது என்ன? (அழகுரோஜா)

மான்கள் வாழும் வனத்தின் ஊடே
    சிங்கம் உறுமித் திரிவது என்ன?
மீன்கள் உலாவும் குளத்தின் கரையில்
    கொக்குவந்து நிற்பது என்ன?
காணும் காட்சி எதிலும் இருமை
    எதிரும் புதிரும் சொல்வது என்ன?
கடவுள் ஆட்சியில் ஒன்றில் ஒன்று
    கரைந்து போகும் அருமை என்ன?



# 20. சச்சிதானந்தம்

என்றும் இருப்பது சத்து
எல்லாம் ஆனது சித்து
இரண்டும் சேர்ந்து பிறப்பது ஆனந்தம்
இதனை உணர்ந்தால் பெறுவது ஆனந்தம்
சத்சித் ஆனந்தம்
சச்சிதானந்தம் (என்றும்)

ஒன்று பரமாத்மா
ஒவ்வொன்றும் ஜீவாத்மா
இரண்டறக் கலந்தால் மறைந்திடும் உலகம்
இதனை உணராமல் எத்தனை கலகம்
புத்தி தெளிந்தால் அப்போது
முக்தி கிடைப்பது தப்பாது (என்றும்)

அடக்கம் அசைந்தால் தொடக்கம்
ஆனந்தக் கூத்து நடக்கும்
படைப்பு, காப்பு, மறைப்பு விதம் விதம்
பராசக்தியின் சுதந்திரம் - அதுவே நிரந்தரம்!
சக்தியின் பொற்பதம் பாடு
சங்கீதமே வழிபாடு! (என்றும்)

உடலும் உயிரும் அவளே
உயிர்க்குயி ரானவள் அவளே
முதலும் முடிவும் அவளே
முடிந்தபின் இருப்பதும் அவளே

எதிலும் இயக்கம் அவளே
இடையில் மயக்கமும் அவளே
புதிராய் இருப்பதும் அவளே
புரியச் செய்வதும் அவளே
அவள் யார் யாரென்று தேடு
அபிநய நாட்டியம் ஆடு! (என்றும்)





# 21. சுழி

எல்லாம் தோன்றும் இடம்
யாவும் அடங்கும் இடம்
இல்லாத ததுபோல் இருப்பது எதுவோ
அதுவேதான் நிஜம்
அதனால்தான் ஜகம் - ஆம்! (எல்லாம்)

வானம் எங்கும் ஜோதிமயம்
காற்று வெளியில் கீதலயம்
தீயில் தோன்றும் நீரின் முகம்
நீரின் மடியில் பூமிவனம் - ஆம்! (எல்லாம்)

புள்ளி வளர்ந்தது கோணம்
கோணம் வரைந்தது கோலம்
கோலம் காட்டுது கூடம்
கூடத்தின் முன்பல மாடம் - ஆம்! (எல்லாம்)

கரையில் அலைகள் ஓலம்
கடலின் நடுவே மோனம்
இடையில் ஆடும் ஓடம்
இயற்கை சொல்லும் பாடம் - ஆம்! (எல்லாம்)

கூட்டிப் பார்த்தால் தீமை
கழித்து விட்டாலே நன்மை
பெருக்கல் செய்தால் பெருமை
வகுத்துக் காண்பது அருமை - ஆம்! (எல்லாம்)



# 22. கூத்தனூர் சந்திப்பு

கண்ணைக் காட்டி கையை ஆட்டி
மண்ணுப் பொம்மை ஆடுது
கால நேரம் வந்து விட்டால்
கண்ணு ரெண்டும் மூடுது

ஆடாத பொம்மைக் காக
ஆடும் பொம்மை அழுவுது
அந்தப் பொம்மை கதையும் ஒருநாள்
அப்படித்தான் ஆகுது

கயிறறுந்த பட்டம் போலே
உயிர் பிரிந்து ஓடுது
கருப்பை என்னும் மரத்தில் சிக்கி
கால காலம் வாடுது

கட்டை வைத்துச் சுட்ட சாம்பல்
கரைத்த நீரைக் குடிக்கிறாள்
முட்டை வைத்துக் குஞ்சு பொறித்து
முத்தம் வைத்துக் கொஞ்சுறாள்

எந்த தேசம் பயணம் அங்கே
என்ன ஆனோம் தெரியலே
இந்த உடலும் உயிரும் கொண்ட
சொந்தம் என்ன புரியலே!

நீர்க்குமிழி போல வந்த
நிலையில்லாத வாழ்வடா
நித்தநித்தம் ரத்தம் சிந்தி
மிச்சம் என்ன கூறடா!

கூடுவிட்டுக் கூடு பாயும்
குருவி வாழ்க்கை போதுமே
கூத்தனூரில் சென்று என்றும்
குடியிருக்கப் போகிறேன்!





# 23. வீழாத வாழ்வு வேண்டும்!

நீரோடும் மீனுக்கு நீச்சதும் மூச்சதும்
நீரோடும் போக்கிலே தான்!
நெஞ்சிலே சதைப்பற்று கொண்டவர் வாழ்க்கையும்
நித்தமும் காம வசம்தான்!
தேரோடும் வீதியும் மாற்றஇய லாததொரு
செக்கு சுற்றல் போலத்தான்!
திசைகாட்டும் கருவியை எங்கு வைத்தாலும்அது
திரும்புவது ஒரு திக்கில் தான்!

சேறாடு புதைகுழியில் சிக்கிய செருப்புக்குச்
சேற்றோடு போகும் நிலைதான்!
சிந்தையில் ‘குடி’ வைத்து மந்திரம் சொன்னாலும்
தேடுவது மதுக்கிண்ணம்தான்!
வேரோடு வீழ்ந்தாலும் வாழைக்கு அடிவாழை
வெடித்துக் கிளம்பிடல்போல்
வித்தகம் பேசிடினும் இச்சைவைத்துத் திரிவார்
புத்தியும் மாறல் இலையே!

நோயாளி ஆனாலும் வாய்கொண்ட சுவை ஆசைப்
போராட்டம் விடுவதில்லை!
நூறுமுறை இடித்தாலும் கோழைக்குத் துணிவில்லை
வீரமோ வருவதில்லை!
தாயான போதிலும் பெண்ணுக்குப் பொன்னாசை
சட்டென்று தணிவதில்லை!
தனியாக வாழ்ந்தாலும் துறவிக்குச் சோறுதுணிக்
கவலையோ தொலைவதில்லை!

ஓயாது மேடையில் கூவிப் பழகினோர்
ஓய்வினை அடைவதில்லை!
உண்மையின் பேர்சொல்லிப் பொய்யினை அளப்பவர்
முன்னேற முடிவதில்லை!
வாயாலே வலைபின்னித் தான்மட்டும் வீழாத
வழியினைச் சொல்லுதாயே!
வற்றாத பேரழகு வடிவமே சிவசக்தி
ஒற்றியூர் வாழும் மயிலே! - திரு
ஒற்றியூர் வாழும் மயிலே!



## 24. பேரொளியின் காட்சி

பிறக்கும் போதும் துன்பம் - நாம்
இறக்கும் போதும் துன்பம் - இதை
மறைப்பதற்கில்லை
வளரும் போதும் துன்பம் - உடல்
தளரும் போதும் துன்பம் - அதை
மறுப்பதற்கில்லை (பிறக்கும்போதும்)

இல்லார்க்கும் கவலை - பொருள்
உள்ளோர்க்கும் கவலை
எல்லார்க்கும் கவலை அது இல்லாமல் இல்லை
சொல்வாக்கு எங்கே - உன்
செல்வாக்கு எங்கே
நில்லாத வாழ்க்கைஇது ஐயா - நீ
நிலைப்பதற்கு வழி பாராயா - ஐயா (பிறக்கும்போதும்)

வினைகளின் ஆட்டம் - இந்தப்
பிறவியின் தோற்றம்
மனம்போன போக்குஅது வந்ததே தொல்லை
இறைவனின் நாட்டம் - தலை
விதியையும் மாற்றும்
விடுதலை கிடைத்திடுமே ஐயா - உன்
வேதனை விலகிடுமே ஐயா - ஐயா (பிறக்கும்போதும்)

உலகமும் சுழற்சி - இங்கு
உடல்களும் சுழற்சி
செயல்கள் எல்லாம் சுழற்சியின் இயக்கம் ஐயா
அறிவின் உச்சி - அதை
அறிவதன் வளர்ச்சி
உயிரதன் மலர்ச்சி ஐயா - பேர்
ஒளியின் காட்சிஅது ஐயா (பிறக்கும்போதும்)



## 25. அவ்வளவே!

வா..... ராஜா.... வா!
வாழக்கையில் எத்தனை வகைவகை மனிதர்கள்
பார்த்திடு! பழகிடு! பாடங்கள் படித்திடு!
வா..... ராஜா...... வா!

நினைப்ப தெல்லாமே நடந்துவிட் டாலே
மனிதன் அழுவானா?
நிம்மதி அதனைப் பெற்றுவிட்டாலே
கடவுளைத் தொழுவானா?
உள்ளே ஒன்று வெளியே ஒன்று உலகம் இவ்வளவே!
உருளும் காயாய் வருவார் போவார் வாழ்க்கை அவ்வளவே!
(வா.... ராஜா.... வா!)

தாடி வளர்த்தவர் யாவரும் உண்மைச் சாமியார் ஆவாரா?
தடியை எடுத்த தம்பியர் எல்லாம் தலைவர்கள் ஆவாரா?
வேடிக்கை உலகின் வாடிக்கைச் சித்திரம் கோடிக் கணக்காகும்
வேகம் மோகம் தாகம் சோகம் சரித்திரம் இதுவாகும்!
(வா.... ராஜா.... வா!)

கேட்பது ஒன்று கிடைப்பது ஒன்று கேலிக் கூத்தேடா!
கேள்வியைக் கேளு வாழ்வினைப் பாரு போலிப்
பொம்மையடா!
சேர்த்ததை எல்லாம் விட்டுப் போகும் நிலைமை வரும்போது
சேர்ந்தவர் பிரிந்தவர் போடும் சண்டைகள் சிரித்து முடியாது!
(வா.... ராஜா.... வா!)



# 26. ஞானம் வந்த நேரம்!

போதை தீரும் போது
தேவை புதிய பாதை
காதல் போன பின்பு
கையில் மிச்சம் அன்பு! (போதை)

ஞானம் வந்த நேரம்
தேவை அந்த வேதம்
நாதம் கூடும் காலம்
பாடு சாம கானம்! (போதை)

இந்த பூமி வாழ்வு
வழியில் சற்று ஓய்வு
வந்த நோக்கம் வேறு
வரவு செலவு பாரு! (போதை)

சங்கு ஊதல் கேளு
சட்டை மாற்ற ஓடு
எந்த தேசம் போக?
யார் அறிந்து சொல்ல! (போதை)



# 27. பாதை மாறுதே!

பயணமே தொடருமா - ஓ....
பாதை மாறிடுதே!
பகலும் போகும்
இருளும் சூழும்
விளக்கெங்கே தேடுவேன்! (பயணமே)

நடந்ததும் கனவுகள் நடப்பதும் கனவோ!
உறக்கந்தான் உண்மையோ!
எதற்கிங்கு வந்தேன்! இனி எங்குப் போவேன்!
கலக்கந்தான் மிச்சமோ!
மேடையில் நாடகம் நானொரு பாத்திரம் - இனி
யார்துணை நாடுவேன்
தனிமையில் வாடுவேன்.... தனிமையில் வாடுவேன்!
(பயணமே)

இலையினில் பனித்துளி நடனமோ உடனே
மறைந்ததே மாயமே
வளர்பிறை தேய்பிறை வந்து வந்து போகுமே
இயற்கையே ஜாலமே
ஆடுது பம்பரம் யாரிங்கு நிரந்தரம் - இந்த
யாத்திரை சூட்சுமம்
எங்குதான் சங்கமம்.... எங்குதான் சங்கமம்!
(பயணமே)

## 28. கேள்விக்கென்ன பதில்?

எங்கே எங்கே எங்கே என்றே
இலட்சி யங்களைத் தேடுகிறேன்
இங்கே இல்லை இங்கே இல்லை
என்ற பதிலே என்செய்வேன்! (எங்கே)

தங்கம் என்னும் நண்பாரெல்லாம்
செம்பாய் மாறிப் போகின்றார்
தாயாய் எண்ணும் தூயரெல்லாம்
நாயாய்ச் சீறிப் பாய்கின்றார் (எங்கே)

எல்லாம் இருந்தும் இதயம் இல்லாப்
பொல்லார் நடுவே நிற்பதுவோ!
ஏழை நானும் வாழ்வதற்கு
எத்தனை பாடம் கற்பதுவோ! (எங்கே)

ஏட்டைக் காட்டிப் பிழைக்கின்றார்
எடுத்துக் காட்டாய் இருப்பதில்லை
கூட்டுக் கிளியின் குமுறல்களை
கேட்டுக் கசிவார் யாருமில்லை! (எங்கே)



# 29. வாழ்வின் முரண்கள்

மீண்டும் மீண்டும் விழிக்கிறேன் - நான்
மெல்ல மெல்லத் துளிர்க்கிறேன் (மீண்டும்)

வேண்டும் வேண்டும் என்பதோ
விலகி விலகிப் போவதோ
வேண்டாப் போதில் மீண்டுமே
வேறு வடிவில் வருவதோ (மீண்டும்)

புயலின் மையம் தென்றலும்
புலியின் விழியில் அன்பதும்
விரவிக் கிடக்கும பாங்கினால்
வெளியும் உள்ளும் சேர்ந்ததோ! (மீண்டும்)

காயும் வெய்யில் மழையிலே
காலைப் பொழுது போனதே
மாலை மழையில் தீயுதே
வாமும் கூட்டில் தோயுதே (மீண்டும்)

விழுந்து விழுந்து சறுக்கியும்
எழுந்து எழுந்து நடக்கிறேன்
நலிந்து நைந்தும் சிரிக்கிறேன்
நாளும் பாடம் படிக்கிறேன் (மீண்டும்)



# 30. எல்லாமே சந்தோஷம்!

சந்தோஷமே! சந்தோஷமே!
எந்நாளுமே சந்தோஷமே!
இருக்கும் வரை சந்தோஷமே!
எப்போதுமே சந்தோஷமே! (சந்தோஷமே)

தந்தை அடி சந்தோஷமே
தாயின் மடி சந்தோஷமே
சொந்த பந்தம் சந்தோஷமே
துன்பம் அதும் சந்தோஷம் (சந்தோஷமே)

காதல்அதும் சந்தோஷமே
கல்யாணமும் சந்தோஷமே
பிள்ளைகளும் சந்தோஷமே
தொல்லைகளும் சந்தோஷமே (சந்தோஷமே)

வளர்ந்ததெலாம் சந்தோஷமே
தளர்ந்ததுவும் சந்தோஷமே
மரணம் வந்தால் சந்தோஷமே
மடிந்த பின்னும் பூபாளமே! (சந்தோஷமே)

# 31. அந்தப்பட்டுப் பூச்சி

ஒரு பட்டுப் பூச்சி சிறகை அடித்துப் பறந்து திரிகிறது - அந்தப்
பாலைவனத்தில் சோலை எங்கே தேடி அலைகிறது
இளஞ் சாரல் மழை வருமா - அதன்
மேனி குளிர்ந்திடுமா - அந்தப்
பூ உடல் வெப்பத்தில் வாடி விடாமலே
வாழ்வு கிடைத்திடுமா - அதன்
சோர்வு துடைத்திடுமா (ஒருபட்டுப் பூச்சி)

தூரதூரம் தோன்றும் பசுமை சேர முடிந்திடுமா - அது
கானல்நீரா கனவா நனவா கலைந்து போய் விடுமா
போய்த்தான் பார்ப்போம் போவோம் என்றே போய்க் கொண்டே இருக்கும்
மாலைப் பொழுது வந்ததும் சற்றே மணல் மேட்டில் இறங்கும்

அதன் உயிரில் உணர்விருக்கும் - வரை
உயரப் பறந்திருக்கும் - மீண்டும்
பறந்து கொண்டே இருக்கும் (ஒருபட்டுப் பூச்சி)

காரிருள் வந்தும் மேலும் பறக்கும் பறந்து கொண்டே இருக்கும்
பால் நிலவதனைப் பார்த்துச் சிரிக்கும் பக்கத்திலே அழைக்கும்
வானம் வரைக்கும் வரஇயலாது தாவித் தத்தளிக்கும்
பூமியின் மடியே போதும் என்றே பூஞ்சிறகை மடக்கும்

ஒருவிடியல் வந்திடுமா - இல்லை
மடிந்து போய் விடுமா - மீண்டும்
எழுந்து பறந்திடுமா (ஒருபட்டுப் பூச்சி)

ஒரு பட்டுப் பூச்சி சிறகை விரித்துப் பறந்து வந்ததுவே - அந்தப்
பாலை வனத்தில் வழி தெரியாமல் அலைந்து நொந்ததுவே

ஒரு சோலை தென்படுமா - அதன்
வாழ்வு சுகப் படுமா - இந்த
கேள்விக்கு விடை என்ன நாளைய பொழுதும்
தோல்வியில் முடிந்திடுமா - இல்லை
வெற்றி விளைந்திடுமா? (ஒருபட்டுப்பூச்சி)





# 32. சிறகடித்துப் பறக்கிறேன்!

மனமெனும் இறக்கைகொண்டு சிறகடித்துப் பறக்கிறேன்
பூமியிலே இருந்தாலும் வானில்தானே நடக்கிறேன்
(மனமெனும்)

ஓடுகின்ற ஓடையை தடுத்திடவே முடியுமா
வீசுகின்ற காற்றினுக்கு சுவரெழுப்பக் கூடுமா
ஜாதிமல்லி மணத்தினை மூடிவைக்க இயலுமா
பெருமழைச் சாரலை திரைவந்து தடுக்குமா (மனமெனும்)

எந்தஉரும் சொந்தஊர் எல்லோரும் தோழரே
இருப்பில்லை செலவில்லை யாரும் இல்லை காவலே
எங்கெல்லாம் செல்கிறேன் அங்கெல்லாம் சுதந்திரம்
எந்தன் வாழ்க்கைப் பாடமே திறந்த பள்ளிக் கூடமே!
(மனமெனும்)



# 33. சுதந்திர உணர்வுகள்

சுதந்திரம்.... சுதந்திரம்!
நான்விடும் ஜீவ சுவாஸம்
இதயத்தின் இரத்த ஓட்டம்
சுதந்திரம்..... (சுதந்திரம்)

பூமியில் வந்து பிறந்தது முதல் நான்
வாழ்ந்து வருவது அப்படித்தான் - ஒரு
பூகம்பம் வரினும் தாங்கிக் கொள்வேன் - பின்
புதுமனை புகுவேன் நிமிர்ந்தே தான்!
யாருக்கும் எப்போதும் அடிபணியேன் - அவள்
தாயென்றாலும் அன்புக்குத்தான்
பாரதி நாடிது எந்தனின் தந்தையும்
வீரத்துடன் தான் எனைப் படைத்தான்
போராடு என்றே சொல்லிக் கொடுத்தான் (சுதந்திரம்)

மனிதன் என்பதால் தனி உணர்வுகளை
கடவுள் எனக்கு தந்துள்ளான் - தன்
மானம் பெரிது உயிரும் சிறிதென
த்யாகம் செய்துளார் என் முன்னோர்
அயலவன் என்னை ஆள முயல்வது
இயலா தென்பது நிச்சயமே
உயர்வோம் என்பது சத்தியமே - என்
வாழ்க்கை திறந்த புத்தகமே
விடுதலை கீதம் இசைத்திடுமே (சுதந்திரம்)



# 34. அல்லல் இல்லாதவர் யார்?

**விருத்தம்**

இடுக்கண் வருங்கால் சிரித்திடு - அது
என்ன செய்யும் என்றே உரைத்திடு!

**பாடல்**

துன்பத்தையும் இங்கு இன்பமாய்க் கொண்டாலே
துயரெனும் பேச்சுக்கு இடமேது - வீண்
அயர்வதன் ஆட்சிக்கு இடமேது (துன்பத்தையும்)

அன்பினால் உலகம் அமைவது கண்டும்
பண்பினை மறப்பதும் நன்றோ - அறப்
பாதையை வெறுப்பதும் நன்றோ (துன்பத்தையும்)

சிந்திக்கச் சொன்னவன் நஞ்சுண்ட போதிலும்
சிறிதும் கலங்க வில்லை - சாக்ரடீஸ்
சிறிதும் கலங்க வில்லை
சிலுவையில் அறைந்திட்ட போதிலும் தனது
சிந்தை தளர வில்லை - இயேசு
சிந்தை தளர வில்லை

வந்திக்கும் கைவழி குண்டுகள் வரக்கண்டும்
வாழ்த்தத் தவற வில்லை - காந்தி
வாழ்த்தத் தவறவில்லை
வையகம் வாழ்ந்திடத் தம்மையே பலிதந்த
வள்ளல்களை எண்ணிப் பார் - இங்கு
அல்லல் இல்லாதவர் யார்
அல்லல் இல்லாதவர் யார் (துன்பத்தையும்)



# 35. அன்பின் ஒளி

அன்பின் ஒளியால் அமைவதிவ் வுலகம்
துன்பம் யாவும் அன்பால் விலகும் (அன்பின்)
முன்பு தெரியார் நண்பர்க ளாவார்
என்பும் உருகும் அன்பா லிங்கே (அன்பின்)

அன்பிலா நெஞ்சம் பாலைவனம் - அங்கு
அரும்புதல் இல்லை இன்பமலர்
நன்மையை நாடும் நல்லவர்க்கு - இங்கு
உண்மையைக் காட்டும் அன்புமனம் (அன்பின்)

புத்தரை இயேசுவை காந்தியை - நாம்
போற்றி வணங்கிடச் செய்வதெது?
நித்தம் அறம்வளரப் பாடுபடும் - அந்த
நேசம் பாசம் அன்புநிலை! (அன்பின்)





# 36. சிரிப்பினாலே வென்றிடு

தாலல்லால லாலல்லா
தாலேலோ லாலல்லா

இருளகற்றும் பந்தமாய்
என்தனுக்குச் சொந்தமாய்
பொருளிலாத உலகினில் - ஒரு
பொருளதாய் நீ வந்தனை - நல்ல
பொருளதாய் நீ வந்தனை

(இருளகற்றும்)

புலிகள் வாழும் பூமியில் - சிறு
புல்லருந்தும் மானைப்போல்
வழிதவறி நீ வந்தனை - என்
மைந்த என்ன சிந்தனை - என்
மைந்தனே ஏன் சிந்தனை

(இருளகற்றும்)

வாழ்க்கையே ஓர் போர்க்களம் - அதில்
வாளில்லாது வந்தனை
சூழ்ச்சி தொல்லை நெருக்கடி - இதில்
மாட்சி காண்ப தெப்படி - நீ
மாட்சி காண்ப தெப்படி?

வந்த வழியும் துன்பமே - இனி
வாழும் வழியும் துன்பமே
நொந்து நொந்து வெந்திடாது
சிந்தை நிறைவு கண்டிடு - புன்
சிரிப்பினாலே வென்றிடு!

தோல்விகட்கு இடையிலே - நீ
வெற்றிகாண முந்திடு
ஏழை மக்கள் உய்ந்திட
இரத்த மெல்லாம் சிந்திடு - உன் - இரத்தமெல்லாம் சிந்திடு
தாலல்லால லாலல்லா
தாலேலோ லாலல்லா
தலேலோ லாலல்லா





# 37. பிஞ்சும் நஞ்சும்!

பிள்ளை பேசும் மழலைப் பேச்சு பெரியது
பள்ளிக் கூடம் சொல்லும் பாடம் சிறியது
முல்லைச் சிரிப்பைக் கொட்டும் பிள்ளை அமுதமே
கள்ளச் சிரிப்பைக் காட்டும் பெரிய உலகமே! (பிள்ளை)

ஆணும் பெண்ணும் பேதமின்றி வாழவே
அப்பா அம்மா ஆட்டம் ஆடும் பிள்ளையே
காணும் பார்வை காமப்போர்வை வீசுமே
வேதம் ஓதும் யோஹிகூட மோசமே (பிள்ளை)

சாதி சமயம் கட்சிப் பூசல் இல்லையே
சத்தி யத்தில் சற்றும் தவறல் இல்லையே
நீதி காக்கும் கேள்வி கேட்கும் பிள்ளையே
நெஞ்சில் ஒன்று பேச்சில் ஒன்று இல்லையே (பிள்ளை)

பிள்ளை வாழும் இல்லம் யாவும் ஆலயம்
பெரிய கோயில் மணியின் ஓசை கேட்குமே!
அள்ள அள்ளக் குறைந்தி டாத செல்வமே
அன்பு காட்டும் அறிவை ஊட்டும் தெய்வமே!





# 38. தம்பி உனை நம்பி!

தம்பி! உனை நம்பி இருக்குது எதிர்காலம் - உன்
தரம் உயர்ந்தால் தான் நலம்பல நாட்டில் உருவாகும் (தம்பி)

அன்பே மனிதனின் வாழ்க்கைக் கட்டிட அஸ்திவாரம் - அது
இன்றேல் அவனால் பயனொன்றும் இல்லை பூபாரம் (தம்பி)

என்றும் எப்போதும் பணிவு பொறுமை மிகவேண்டும் - உன்
எண்ணம் சொல்செயல் மூன்றும் ஒரு மித்தல் வேண்டும்
நன்றெது என்றே கண்டு கொண்டதன் படி நடந்திடல் வேண்டும்
தீயதைத் தீயென தூரத்தள்ளி ஒதுங்குதல் வேண்டும்
(தம்பி)

போலி நாகரிகப் போர்வையில் மயங்காது விழித்திடல் வேண்டும்
பொய், களவு, பொறாமை, ஆடம்பரங்களை வெறுத்திடல்
வேண்டும்

நாலுபேருக்கு உதவியாளனாய் வாழ்ந்திட வேண்டும்
நாட்டிற்கும் வீட்டிற்கும் காவல் காரனாய் வளர்த்திட வேண்டும்
(தம்பி)

அடிப்படைத் தேவை உணவுடை இருப்பிடம் அதுபோதும்
அளவுக்குமேலே செலவில்லை என்றால் பொருள் மீதம்
வறியவர்க்குச் செல்வர் வழங்குவதன் பெயர் தர்மம்
ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதே சமதர்மம். (தம்பி)



# 39. பெண்மைத்தீபம்!

ஏற்றிய விளக்குகள் ஏழைகள் இல்லத்தில்
என்றென்றும் எரிந்திடுமா?
எழுப்பிய வெடிகள் எத்தர்கள் கொடிய
இதயத்தைப் பிளந்திடுமா? (ஏற்றிய)

புத்தம் புதியநல் ஆடைகளாலே
புதுமை விளைந்திடுமா?
நித்தமும் உழைத்திடும் உத்தமர் வாழ்வில்
நிம்மதி வந்திடுமா? (ஏற்றிய)

எண்ணெயைத் தேய்த்து முழுகிய பின்னும்
எண்ணம் மலர்ந்திடுமா?
உண்மையைச் சொலலவும் சொன்னதைச் செய்யவும்
திண்மை பிறந்திடுமா? (ஏற்றிய)

சத்திய பாமை நரகா சூரனை
சாய்த்தது உண்மை என்றால்
பித்தர்கள் மத்தியில் பெண்மை பிழைத்து
பெருமையும் பெற்றிடுமா? (ஏற்றிய)





# 40. இது என்ன வாழ்க்கை?

எதற்காக வந்தோம்
எங்கே நாம் செல்வோம்
புரியாமலே தடுமாறுவோம்
இது என்ன வாழ்க்கை?
(எதற்காக வந்தோம்)

பாதிநாள் ஏக்கம் மீதிநாள் தூக்கமு
ஏதேனும் பலன் உண்டா சொல்லுங்களேன்?
தாயாரின் மடியில் தாரத்தின் பிடியில்
ஓயாது உழைத்தும் என்ன கண்டோம்?
(எதற்காக வந்தோம்)

தீராத துக்கம் தெரிந்தாலோ வெட்கம்!
போராடிப் போராடி நொந்து விட்டோம்
வேதங்கள் படித்தோம் கீதைகள் உரைத்தோம்
விடிவுக்கு வழிகாணத் தவறிவிட்டோம்
(எதற்காக வந்தோம்)

ஆடிடும் பம்பரம் யார்தான் நிரந்தரம்
நாடக மேடையில் நடிக்கிறோம்
யாத்திரை சூட்சுமம் எங்குதான் சங்கமம்
அறியாமலேயே துடிக்கிறோம்!
(எதற்காக வந்தோம்)



# 41. இன்பம் காணடா!

இன்பம் காணடா - என்றும்
இன்பம் காணடா!

துன்பம் உன்னைத் தொடரும் போதும்
இன்பம் காணடா - நீ - இன்பம் காணடா!
ஆன்புக் காக அனைத்தும் தந்தே
அமைதி காணடா - நல் - அமைதி காணடா!

என்புங் கூட பிறருக்காக
ஈதல் நன்றடா - நற்
பண்பினாலே உயர்ந்துவிட்டால்
பாரம் ஏதடா

வந்தபோது உந்தனோடு
வந்த தெதுவடா? - நீ
போகும்போது கொண்டு போகும்
பொருளும் ஏதடா

நொந்து நொந்து அல்லும் பகலும்
சாவ தேனடா
நோதல் இல்லா சாதல் இல்லா
வாழ்வு காணடா!



# 42. இனிய பொழுது

இன்றைய பொழுது இனியநற் பொழுது
என்றே கடமையைச் செய்க
நன்றே கடமையைச் செய்க!
இன்பம் வரினும் துன்பம் வரினும்
எதையும் தாங்கிக் கொள்க
மனதில் வாங்கிக் கொள்க (இன்றையபொழுது)

பயன்கரு தாமல் உழைத்திருப் போர்கள்
நலன்பல பெறுவார் வாழ்வில்
வளம்பல பெறுவார் வாழ்வில்!
முயற்சியில் லாமல் முடங்கிக் கிடப்போர்
முன்னேற்றம் பெறுவ தெந்நாளில்?
முன்னேற்றம் பெறுவதெந்நாளில்? (இன்றைய பொழுது)

நாளை நமதென்ற நம்பிக்கை யால்தான்
நாளும் வாழ்கிறோம் உணர்க
சோர்வு நீங்கியே தொடர்க!
ஏழையும் ஒருநாள் செல்வன் ஆகலாம்
வாழ வழிபல அறிக!
வாழ வழிஉண்டு அறிக! (இன்றைய பொழுது)



# 43. ஜீவ நதி!

இவள் ஒரு ஜீவநதி
திருமகளின் சந்நிதி
இல்லறம் என்னும்
நல்லறம் நடத்தும்
ஏழிசைச் சுகவாரி - ஒரு
சௌந்தர்ய லஹரி
வைகறைப் புலரி (இவள் ஒரு ஜீவநதி)

கதிரவன் வருமுன் இவள் எழுவாள்
கடமையே தெய்வமாய் கை தொழுவாள்
வாசலில் கோலங்கள் தீட்டிடுவாள்
வாழ்வினில் நாதங்கள் மீட்டிடுவாள் (இவள் ஒரு ஜீவநதி)

விருந்து சமைத்தொரு அமுதம் படைப்பாள்
கரும்புச் சுவைமொழியாள்
குழந்தைகள் கல்விக் கூடம் - ஏகிட
தளிர்க்கரம் அசைத்திடுவாள்
கணவனின் விழிகளில் இதயத்தைப் பதித்து
பணிசெய அனுப்பிடுவாள்
மனையின் மாட்சிக்கு இலக்கணம் வகுப்பாள்
கலைகளின் நாயகியாள் (இவள் ஒரு ஜீவநதி)

**முடுகு:**

பூவாய் இருப்பவள் சோதனை வந்தால்
புயலாய் மாறிடுவாள்
யாரே ஆயினும் நியாயம் தவறின்
புலியாய்ச் சீறிடுவாள்

ஊருடன் இயல்பாய் ஒத்துப் போயினும்
உரிமைக்குக் குரல்கொடுப்பாள்
நாடும் வீடும் நலங்கள் பெறவே
நாளும் உழைத்திடுவாள் - புதுப்
பாதை அமைத்திடுவாள்

இவள் தான் இந்தியப் பெண்மணி
எதையும் தாங்கும் கண்மணி
கட்டிக் காப்பது இவள்பாடு - அது
ரத்தத்தில் ஊறிய பண்பாடு - இவள்
ரத்தத்தில் ஊறிய பண்பாடு (இவள் ஒரு ஜீவ நதி)





# 44. அனைத்தும் உன்னால்

உன்னையே உலகினில் உயர்வென்போன் - எந்தன்
அன்னையே அன்னையே அன்னையென (உன்னையே)

என்னை ஈரைந்து திங்கள் சுமந்து
ஈன்றெடுத் தாயே மனமிக உவந்து (உன்னையே)
நின்னையே எனக்குத் தந்தாய் - இங்கு
என்னை நீ ஆளாக் கியதாய்
என்பிழை கண்டுளம் நொந்தாய் - அதை
அன்புடன் திருத்தி மகிழ்ந்தாய் (உன்னையே)
வந்ததும் வளர்ந்ததும் வாழ்வதும் உன்னால்
வார்த்தையால் விளக்கிட முடியுமோ என்னால்
சந்ததம் என்திருத் தெய்வமும் நீயே
தாயே எனக்குச் சகலமும் நீயே (உன்னையே)



## கலைமாமணி
## டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
## அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
   ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஸ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஸ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கரா!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி
(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)
19. ஞாலம் போற்றிய ஞானியர்
20. மாதாவே! மரியே...!
21. மாசிலா ஏசு
22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)
23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)
24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)
25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)
26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)
27. காதல்! காதல்!
28. என் இரு விழிகள்
29. எண்ணிப் பார்க்கிறேன்
30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)
31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)
32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)
33. பாத மலர்கள்
34. இசை மாலை
35. சாரல்
36. பொங்க புனல்
37. கங்குள் வெள்ளம்
38. இன்பத் தீ
39. செக்கர் வானம்
40. அன்னையடா அன்னை
41. வளரும் பயிர்
42. பொன்மாரி மொழிகள்
43. மலேசிய திருத்தலங்கள்

# குறிப்புகள்

இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக் காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...

தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

**உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்** என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.



நெய்தல்
பதிப்பகம்